# உங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதில் பிரச்சினைகள் உள்ளவர்களா?



Dr.எஸ்.தேவானந்தன்
M.D.(Col),P.G.Dip.H.D.
Consultant Pediatric Psychologist,
Director & CEO,
OSILMO Special Education and
Research Centre

உங்களுடைய பிள்ளைகளின் கல்வியைப் பற்றி என்னைவிட பெற்றோராகிய உங்களுக்கே மிகவும் நன்றாகத் தெரியும். உலகம் முன்னேறி கல்வி நடவடிக்கைகளும் மென்மேலும் முன்னேறிக் கொண்டு செல்லும் இக்கால கட்டத்தில் அவர்களது கல்வியை நன்றாக மேம்படுத்துவதற்கு நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள். ஆனாலும் சில வேளைகளில் அது நடைபெறாது போகும் போது எவ்வளவு தூரம் நீங்கள் விரக்தி அடைவீர்கள் என்பதை நானும் ஒரு பெற்றார் என்ற முறையில் நன்கு அறிவேன்.

நாம் எமது பிள்ளைகளைப் பற்றி எவ்வளவோ கனவுகளுடன் அவர்களின் கல்வி அறிவை வளர்க்க முற்படுகின்றோம். இதற்காக எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறோம் என்றாலும் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு எமது பிள்ளைகள் கல்வி கற்பதில் பின்தங்கும் போது தான் நாம் மனவேதனைக்கு உள்ளாவதுடன் பிள்ளைகளையும் பல வழிகளில் தாக்குகின்றோம். இங்கு நாம் பார்க்க வேண்டிய முக்கியமான விடயங்கள் நிறையவே உள்ளன. இதைப் பற்றியே நாம் இங்கு பார்க்க இருக்கின்றோம்.



### உங்கள் பிள்ளைகளைப் பற்றி இவ்வாறு எல்லாம் நினைக்கிறீர்களா?

எனது பிள்ளையால் படிக்க முடியாது என்று இல்லை. ஆனால், இன்னும் சிறிது முயற்சி எடுத்தால் நன்றாக முடியும். ஆனால் அதைச் செய்வதில்லை.

எனது பிள்ளை நன்றாகப் பாடங்களைக் கவனிக்கிறார். படிக்கிறார். ஆனால், பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் வருவதில்லை.

எனது பிள்ளைக்கு அருகில் இருந்து சொல்லிக் கொடுத்தால் எல்லா வேலைகளையும் நன்றாகச் செய்கிறார். ஆனால், பாடசாலைக்கு என்னால் சென்று பிள்ளைக்கு அருகில் இருக்க முடியுமா?

சொல்லிக் கொடுத்ததற்குப் பிறகு எனது பிள்ளை ஏதோ பார்த்துக் கொண்டு இருக்கிறானே ஒழிய எதையும் எழுதுவதில்லை.

இந்தப் பிள்ளைக்கு அவசரம் கூட, சரியாக வாசித்து பார்த்து ஒன்றையும் செய்வதில்லை.

இந்தப் பிள்ளை இன்னும் கொஞ்சம் அவதானமாக இருப்பின் இதைச் செய்ய முடியுமே.

படிப்பிக்கும் போது நன்றாக விளங்கிக் கொள்கிறார். ஆனால், கேள்விக்குப் பதில் சொல்லும்போது எல்லாவற்றையும் மறந்து போகிறாரே.

எனது பிள்ளைக்கு நல்ல புத்தி இருக்கின்றது. எல்லாவற்றையும் புரிந்து கொள்கிறார். ஆனால் விடை எழுதும் போது மிகவும் நேரம் எடுக்கிறார்.

இந்தப் பிள்ளைக்கு ஏதாவது எழுதச் சொன்னால் ஓர் இரு வாக்கியங்களை எழுதி

விட்டுப் பின்னர் சிறிது நேரம் வேறு எங்காவது பார்க்கிறான். பின்னர் எழுதுகிறார். இதனால் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து அவர்களின் வேகத்திற்கு ஏற்றாற் போல் எழுத முடிய வில்லை.

தனது வீட்டிலும் சரி வேறு இடங்களிலும் சரி நன்றாக விளையாடுகின்றான், படிக்கின் றான். ஆனால் பாடசாலையில் எதற்கு எடுத்தா லும் வெட்கப்படுகின்றான்.

இவ்வாறு பலவிதமாக பெற்றோராகிய நீங்கள் பிள்ளைகளைப் பற்றியும் தெய்வத்திற் குச் சமமாக இருக்கும் ஆசிரியர்களாகிய நீங்கள் உங்களிடம் கல்வி கற்கும் பிள்ளைகளைப் பற்றியும் சிந்தித்து இருப்பீர்களாயின் நீங்கள் இதனைத் தொடர்ந்து வாசிக்கவும்.




பிள்ளைகளின் கல்வியில் அதாவது கல்வி கற்பதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் ஆய்வு செய்து பார்த்ததில் இருந்து இப்பிள் ளைகளின் பிரச்சினை களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**பின்வரும் விளக்கங்கள் உங்கள் பிள்ளைகளிடமும் இருக்குமாயின் சற்று அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

அ) சாதாரண வேலைகளைக் கூடச் சரியாக செய்ய முடியாமை

1. எந்த நேரமும் கைகளால் எடுக்கும் பொருட்கள் கையை விட்டு நழுவி விழுதல். உதாரணமாக குடிக்க எடுக்கும் தண்ணீரைக் கொட்டுதல்.

2. உடுப்புகளில் பொத்தான் பூட்ட முடியா மை, சப்பாத்து லேசு கட்ட முடியாமை, சிப் பூட்ட முடியாமை முதலியன.

3. கண்களால் பார்த்து கைகளால் செய்யும் வேலைகளைச் சரியாகச் செய்ய முடியாமை.

உதாரணமாக: வீணை வாசித்தல், வலைப் பந்து, கூடைப்பந்து விளையாடுதல் ஆகியன.

4. சித்திரம் வரைந்தால் அது அவருடைய வயதிற்கு ஏற்றதாக இருக்காது.

5. நிறங்களைக் கண்டறிய முடியாது போதல், குறிப்பிட்ட பகுதிக்குள் நிறம் தீட்ட முடியாமை.

6. வித்தியாசமான முறையில் பென்சில் பிடித்து எழுதுவார்கள். அத்துடன் எழுத்தும் அழ காக இருக்காது.

7. எழுதுதல், சித்திரம் வரைதல் போன்ற வற்றை விரும்ப மாட்டார்கள். இவற்றைச் செய்யச் சொல்லும் போது விலக முற்படுவர்.

8. சிறிய சிறிய வேலைகள் செய்வதில்கூட கஷ்டப்படுவார்கள். உதாரணமாக கத்தரிக் கோல் பாவிப்பது, விளையாட்டுப் பொருட் களைப் பொருத்துவது என்பவற்றில் கஷ்டம்.

**ஆ) பேச்சுத் திறனில் காணப்படுகின்ற பிரச்சினைகள்**

01. கதைக்கத் தொடங்குவதில் தாமதம் காணப்படுதல்

02. பேச்சுத் திறனை கட்டுப்படுத்த முடியாத தன்மை. சிலர் மிகவும் உரத்த சத்தத்துடன் கதைப்பார்கள். சில பிள் ளைகள் மிகவும் மெது வாகப் பேசுவார்கள்.

03. இடங்களை, மனிதர்களை அடை யாளம் கண்டுகொள்ள முடியாத தன்மை

04. கதைக்கும் போது அவசியமில்லாத இடத்தில் அவசிய மில்லாத சொற்களைப் பயன்படுத்தல்

05. ஒரு விடயத்தைக் கூறி திரும்பக் கேட் கும் போது சொல்ல முடியாத தன்மை அதாவது மறந்து போதல்.

06. ஒரு விடயத்தைப் பற்றி தொடர்ந்து இவர்களால் பேச முடியாமை. அதாவது அவத ானம் வேறு இடங்களுக்குச் செல்லுதல்

07. சில பிள்ளைகள் அதிகளவு பேச மாட்டார்கள். சுருக்கிப் பேசுவார்கள்.

08. பேசும் போது இடை இடையே சில பல சத்தங்களை உருவாக்கிப் பேசுவார்கள்.

09. சொற்களை பிழையாக உச்சரித்தல்

10. ஒரே வகையாகக் காணப்படுகின்ற சொற்களைப் பேசும் போது பிழை விடுதல்

11. பாட்டுப் பாடுவதில் கஷ்டம் காணப் படுதல்

12. கதை சொல்லவோ கதை கேட்கவோ விருப்பமில்லாமை

13. அறிவுரைகள் கூறும் போது அதை விளங்கிக் கொள்ள முடியாது போதல்

14. நகைச்சுவைகளை புரிந்து கொள்ள மாட்டார்கள்.



### இ) வாசிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள்

01. ஒரே வகையாக தோற்றமளிக்கும் எழுத்து, எண்கள் மாறுபடுகின்றமை. உதாரணமாக b,d/ w,m/ந,த/ 6,9

02. ஒரே வசனத்தை திரும்பத் திரும்ப வாசித்தல் அல்லது ஒரு வசனத்தை விட்டு அடுத்த வசனத்தை வாசித்தல்

03. ஒரே வகையாகக் காணப்படுகின்ற சொற்கள் மாறுபடுகின்றமை.

அம்மா - அம்மி

பட்டம் - வட்டம்

04. அரிச்சுவடி எழுத்துக்களை ஞாபகம் வைத்திருக்க முடியாமை

அஆஇ - A-Z

05. எழுத்துக்களை மாறி வாசித்தல் ONஐ NO என வாசித்தல்

06. வாசிப்பதை விளங்கிக் கொள்வது இல்லை. அதாவது ஏதோ வாசித்து முடிப்பார்கள். ஆனால், அதில் உள்ள அர்த்தம் தெரியாது.

07. வசனங்களையோ சொற்களையோ சரியாக உச்சரிக்க முடியாமை

08. வாசிக்கும் போது சொல்லின் முதல் எழுத்தைக் கண்டவுடன் தனக்குத் தெரிந்த சொல்லைச் சொல்லுதல். முற்றாக வாசித்துச் சொல்வதில்லை.

### ஈ) எழுதுவதில் காணப்படும் பிரச்சினைகள்

01. வேகமாக எழுத மாட்டார்கள். அழகாகவும் எழுத மாட்டார்கள்

02. கரும்பலகையில் உள்ளவற்றை கொப்பியில் எழுத விருப்பமில்லை.

03. சில பிள்ளைகள் எழுதியவற்றை அழித்து அழித்து எழுதுதல் அல்லது வெட்டி வெட்டி எழுதுதல்

04. எழுதும் போது எழுத்துக்களை மாறி மாறி எழுதுதல்

05. சொற்களுக்கு அல்லது எழுத்துக்களுக்கிடையில் காணப்படும் இடைவெளிகள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படுதல்.

06. எழுதும் எழுத்துக்கள் முடிவடைவதில்லை. உதாரணமாக குற்று இருக்காது அரவு இருக்காது.

07. சிந்தித்து வசனங்கள் அமைக்க முடியாமை

08. முற்றுப்புள்ளி, வினாக் குறியீடு போன்றவற்றை கவனயீனமாக விட்டு விடுதல்

09. கட்டுரைகள் எழுதும் போது பிள்ளைக
ரின் வயதிற்கு ஏற்ற மாதிரி எழுத முடியாமை
ிளக்கமில்லாது எழுதுதல், பந்தி பிரித்தெழுத
டியாது போன்றன.

**உ) கணிப்பில் ஏற்படும் பிரச்சினைகள்**

01. சாதாரண கூட்டலில் பிழை விடுதல்

02. பெரிய இலக்கம், சிறிய இலக்கம் என்று வேறு பிரித்து அறிய முடியாமை. இவர்கள் ஒன்றில் இருந்து எண்ணியே இலக்கங்களை அறிந்து கொள்வர்.

03. நீளமாக உள்ள கூட்டல்களையோ பிரித்தல்களையோ செய்ய முடியாமை.

04. குவித்து வைத்துள்ள, பொருட்களை எண்ணிச் சேர்க்கச் சொன்னால் இவர்களால் முடியாது.

05. கடிகாரங்களில் நேரம் பார்ப்பது கடினம்

06. உதாரணம் சொல்லி விளங்கப்படுத்தும் போது அதைப் புரிந்து கொள்ளும் தன்மை குறைவு



07. வேகமாக எண்ணவோ மனதில் வைத்து எண்ணவோ இவர்களால் முடியாது போதல்

08. பெருக்கல், பிரித்தல் மட்டுமன்றி கணித பாடத்திலுள்ள ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற முடியாமை

**ஊ) உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியாமை**

01. தேவை இல்லாத இடங்களில் தேவை இல்லாதவற்றைப் பேசுதல்

02. விளையாட்டிற்குச் செய்யும் நகைச் சுவைகளை புரிந்து கொள்ள முடியாமை

03. இப் பிள்ளைகளை ஒத்த வயதுப் பிள்ளைகளுடன் சேர்ந்து நடக்க விரும்பாமை.

04. இவர்களிடம் உள்ள அறிவை மற்றவர்களுடன் சேர்ந்து பகிர்ந்து கொள்ளும் தன்மை இல்லை.

05. துக்கம் அல்லது ஏதாவது பிரச்சினை வந்தால் அதைத் தனியாக சமாளிக்க முடியாமை.

06. பலர் சேர்ந்திருக்கும்போது கூட இப் பிள்ளைகள் யாருமே இல்லாதவர்கள் போல் இருப்பார்கள்.

07. சில பிள்ளைகள் நினைத்தது நடைபெறாது ஏதாவது புதிய பிரச்சினை வந்தால் மிகவும் கஷ்டப்படுவார்கள்.

8. இவர்களால் சரியான இலக்கை நோக்கிச் செல்ல முடியாது.

9. தமது திறமையை நம்பி எதிலும் இறங்க மாட்டார்கள். கூடுதலாக அதிர்ஷ்டத்தையோ அல்லது வேறு வழிகளையோ சிந்திப்பார்கள்.

தொடர்ந்து அடுத்த இதழில் பிள்ளைகளில் காணப்படும் பிரச்சினைகளுடன் அதற்குரிய விளக்கங்களையும் தீர்வுகளையும் எதிர் பாருங்கள்.

இவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொ. பே. இலக்கங்கள் 011 2545114,071 4307274,071 4204250

தொடரும்